

திருச்சியில் நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு மாநகராட்சிக்கு உட்பட்ட கிராப்பட்டி முஸ்லிம் தெருவில் தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் ரூ 31.28 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள நவீன பொதுக் கழிப்பிட கட்டடத்தை நேற்று முன்தினம் (08.02.2024) பொதுமக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார். இந்நிகழ்வில், மாவட்ட ஆட்சித் தலைவர் பிரதீப் குமார். மாநகராட்சி மேயர் மு.அன்பழகன், மாநகராட்சி ஆணையர் மரு.இரா.வைத்திநாதன். நகர பொறியாளர் சிவபாதம், மத்திய மாவட்டச் செயலாளர் வைரமணி. கோட்ட தலைவர்கள் விஜயலட்சுமி. கண்ணன். துர்கா தேவி மற்றும் கழக நிர்வாகிகள் காஜாமலை. விஜய். முத்துச்செல்வம். மோகன்தாஸ். கமல். முஸ்தபா, கவிதா. செல்வம். கிராப்பட்டி செல்வம், இளங்கோ, ராம்குமார், கண்ணன், நாகராஜ், ராமதாஸ், மூவேந்திரன், புஷ்பராஜ், பாலசுப்பிரமணியன், கலைச்செல்வி, கவிதா, சுரேஷ், கருத்து கதிரேசன், மாமன்ற உறுப்பினர்கள், அரசு அலுவலர்கள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.



இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (08.02.2024) மும்பையில் நடைபெற்ற "SPORTSTAR ACES–2024" விருது விழாவில் பங்கேற்று, "Best State for Promotion of Sports" (விளையாட்டை ஊக்குவிப்பதில் சிறந்த மாநிலம்) என்ற பிரிவில் தமிழ்நாடு மாநிலம் தேர்வு செய்யப்பட்டதற்கான விருதை பெற்றுக் கொண்டார். இந்நிகழ்வில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா மற்றும் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி உடனிருந்தனர்.



சென்னை, தலைமைச் செயலகத்தில், நேற்று முன்தினம் (8.2.2024) பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு – நெடுஞ்சாலைத்துறையில், பணிபுரியும் பணியாளர்களுக்கு "பணி மாற்றம் மற்றும் பதவி உயர்வு" ஆணைகளை வழங்கினார். இந்நிகழ்வின் போது, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் பிரதீப் யாதவ், நெடுஞ்சாலைத்துறை முதன்மை இயக்குநர் திருமதி ந.சாந்தி, நெடுஞ்சாலைத் துறை தலைமைப் பொறியாளர் கட்டுமானம் & பராமரிப்பு இரா.சந்திரசேகர் மற்றும் இணை இயக்குநர் (நிர்வாகம்) திருமதி ஆர்.விமலா ஆகியோர் கலந்து கொண்டனர்.



உதகை அருகே கட்டட விபத்தில் உயிரிழந்த 6 பெண்களின் குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறி அரசின் சார்பில் தலா ரூபாய் 2 லட்சத்திற்கான காசோலைகளை அமைச்சர் கா.ராமச்சந்திரன் வழங்கினார்.


